| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>ஜெயலெட்சுமி | அ.வ.எண்.207/2011 | 31.10.2023 |

<u>குறுக்கு விசாரணை</u>

1. எனது பிரமாண வாக்குமூலத்திற்கு விவரம் சொன்னது நான் தான். ஆதியில் தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் பரமசிவம் செட்டியாரிடமிருந்து, மணக்கான் கிரையம் பெற்ற சொத்தாகும். நான் தாவா சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் எழுவாய் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். மேற்படி எந்த ஆண்டு கிரையம் பெற்றேன் என்றால் 1994 ம் ஆண்டு கிரையம் பெற்றேன். தாவா சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 37 செண்ட் இருக்கும் என நினைக்கிறேன். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் நான்கெல்லை என்ன என்றால் கோவிந்தன் வயலுக்கு கிழக்கு, பாவாயி வயலுக்கு மேற்கு, சித்தார்தன் வயலுக்கு வடக்கு, தெற்கில் சுப்பிரமணியன் வயலாக இருக்கும் என நினைக்கிறேன். தாவா சொத்திற்கு அருகில் உள்ள பிரதிவாதியின் நிலம் எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கில் உள்ளது. நான் எத்தனை ஆண்டு காலமாக எனது கணவருடன் திருச்சி BHEL பகுதியில் குடியிருந்து வருகிறேன் என்றால் நான் திருமங்கலத்தில் தான் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தில் என்ன சாகுபடி செய்துள்ளேன் என்றால் வாழை சாகுபடி செய்துள்ளேன். தாவா சொத்தை பொருத்த சாகுபடி அடங்கல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு வாய்தா ரசீது உள்ளதா என்றால் இல்லை, வாய்தாவே இல்லை என்று சொன்னார்கள்.

2. மேற்படி வாய்தா உண்டா அல்லது இல்லையா என்பது குறித்து வருவாய்துறையில் கேட்டால் தெரியவரும் என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது கணவர் BHEL நிறுவனத்தில் வேலை செய்வதால் நான் வெளியூர் சென்றுவிட்டேன் என்று சொல்லியுள்ளது தவறானதா என்றால் சரியானது தான், எனது கணவர் மட்டும் தான் BHEL நிறுவனத்தில் வேலை செய்துவருகிறார். என்னால் தாவா சொத்தில் நேரடியாக சாகுபடி செய்ய முடியவில்லை என்ற காரணத்தினால் பிரதிவாதியிடமிருந்து ரூ.20 ஆயிரம் பெற்றுக்கொண்டு வர்த்தமான ஒப்பந்த பத்திரம் ஒன்று எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. நான் வர்த்தமான ஒப்பந்த பத்திரம் பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக எழுதி கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதியிடம் ரூ.20 ஆயிரத்திற்கு ஒத்திக்கு விட்டுவிட்டு அதை திருப்பாமல் நாளது தேதிவரை பிரதிவாதி தாவா சொத்தை சாகுபடி செய்துவருகிறார் என்றாலும் சரியல்ல. என்னால் தாவா சொத்தை சாகுபடி செய்ய முடியாத காரணத்தினால் சென்டிற்கு ரூ.2 ஆயிரம் வீதம் ஏற்கனவே கொடுத்த ரூ.20 ஆயிரத்தை கழித்துவிட்டு மீதம் ரூ.50 ஆயிரம் நான் பெற்று கொண்டு நான் நாளது தேதிவரை கிரையம் பத்திரம் எதுவும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றாலும் பிரதிவாதிகள் வசம் தான் தாவா சொத்தை பொருத்த சுவாதீனம் உள்ளது என்றாலும் சரியல்ல, நான் தொகை எதுவும் வாங்கவில்லை.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் 26.06.2011, 03.07.2011 மற்றும் 04.07.2011 ஆகிய தேதிகளில் பிரதிவாதி அடியாட்களுடன் வந்து கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று பிரச்சனை செய்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி அடியாட்களுடன் வரவில்லை என்றாலும், பஞ்சாயத்தாருடன் வந்து கிரைய ஆவணம் எழுதி கொடுக்க சொல்லி வந்தார்கள் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி அடியாட்களுடன் வந்தது சம்மந்தமாக நான் உடன் காலில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன், பிரதிவாதியை எச்சரித்து அனுப்பி வைத்தார்கள். மேற்படி புகார் சம்மந்தமாக காவல் நிலையத்தில் விசாரணை செய்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் தொகை பெற்ற தேதியிலேயே தாவா சொத்தை பொருத்த உரிமை எனக்கு இல்லாமல் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் இந்த வழக்கில் கேட்டுள்ளேனா என்றால் தற்போது வரை எனது பெயரில் பத்திரம் உள்ளது, வில்லங்கம் போட்டு பார்த்தால் தற்போது எனது பெயரில் தான் இருக்கிறது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கு என்றாலும் எனது பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் இல்லை, எழுவாயி, பெரியசாமி பெயரில் உள்ள பட்டா தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை பொருத்த சுவாதீனம் பிரதிவாதி வசம் தான் உள்ளது என்றாலும், பிரதிவாதியிடம் தாவா சொத்து விற்பனை செய்வதாக இருந்த காரணத்தினால் தான் நான் எனது பெயரில் பட்டா பெறவில்லை என்றாலும் சரியல்ல.

4. நான் பட்டா மாற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் பலமுறை மனு கொடுத்தேன், பட்டா எனது பெயரில் வழங்கவில்லை. மேற்படி புகார் மனுவின் கை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, எனது கை வசம் உள்ளது. வருவாய் துறையில் பட்டா வழங்கவில்லை என்று மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர எனது சுவாதீனத்தை காண்பிக்க வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் கேட்கவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை பொருத்து கிரையம் பேசி நாளது தேதிவரை தாவா சொத்தின் சுவாதீனம் பிரதிவாதி வசம் இருக்கும் காரணத்தினால் தான் எனது சுவாதீனத்தை காட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எழுதி கொடுத்த வர்த்தமான ஒப்பந்தத்தில் உள்ள சாட்சி கையொப்பம் இட்டவர்களை அழைத்து விசாரணை செய்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் நான் எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றாலும், பிரதிவாதி தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றாலும் அதனால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.